**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,**

**SINGAMPUNARI**

**C.C. No. 125/2023 PW . 1**

**பெயர் : மதிவாணன்** **தந்தை/கணவர் பெயர்:**

**ஊர் :** **தாலுகா:**

**வயது :** **தொழில்: வனசரக அலுவலர்**

**ஜாதி :** **சமயம்:**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 20.02.2025

---

**(எதிரிகள் ஆஜர்).**

**<u>20.02.2025 முதல் விசாரணை:</u>**

1. நான் தற்போது சிவகங்கை மாவட்டம், சிறுமலை வனசரக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 27.05.2021ம் தேதி திருப்பத்தூர், வனசரக அலுவலராக பணிபுரிந்த போது அன்றைய தினம் மாலை சுமார் 5 மணியளவில் கரிசல்பட்டி பிரிவு வனவர் பிரகாஷ் என்னை செல்போனில் தொடர்புகொண்டு பழைய நெடுவயல் கிராமத்தில் உள்ள கண்மாயில் நீர்நாயினை வேட்டையாடி சிலர் பிடித்து கட்டி வைத்திருப்பதாக தகவல் சொன்னார். அதனை மீட்பதற்காக நான் விரைந்து சம்பவ இடத்திற்கு சென்ற போது அங்கு வனப்பணியாளர்கள் வனவர் பிரகாஷ், வனக்காப்பாளர் கண்ணபிரான் மற்றும் சரவணன், மிகைப்பணி வனக்காப்பாளர் கோபுர பாண்டியன் ஆகியோர் சம்பவ இடத்தில் இருந்தனர். அவர்களிடம் என்ன நடந்தது என்று விசாரித்தேன். அவர்கள் சம்பவ இடத்திற்கு வந்த போது ஆண் நீர்நாய் மயங்கிய நிலையில் இருந்ததாகவும் சிறிது நேரத்தில் இறந்துவிட்டதாகவும் தெரிவித்தார்கள். மேலும் தொடர்ந்து விசாரிக்கையில் அங்கிருந்த பழைய நெடுவயல் கிராமத்தை சேர்ந்த ஆஜர் எதிரிகள் தாமாக முன்வந்து மீன்பிடி வலையில் நீர்நாய் சிக்கிக்கொண்டதாகவும், அதனை மீன் என நினைத்ததாகவும், அதனை பிடித்து நைலான் கயிறில் கட்டி வைத்திருந்தாகவும், மயங்கிய நிலையில் இருந்தது, இறந்துவிட்டதாகவும் தெரிவித்து இரண்டு எதிரிகளும் தனித்தனியாக ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தனர். ஒப்புதல் வாக்கு மூலத்தை வனக்காப்பாளர் சரவணன் எதிரிகள் சொல்ல சொல்ல என் முன்னிலையில் பதிவு செய்தார்.

2. என்னிடம் காட்டப்படும் ஆவணங்கள் எதிரிகள் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலங்கள் ஆகும். **அந்த ஒப்புதல் வாக்குமூலங்கள் அத.சா.ஆ.1 மற்றும் 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. சம்பவ இடத்தில் வைத்து H நமுனா பூர்த்தி செய்து எதிரிகளிடமிருந்து கைப்பற்றப்பட்ட இறந்த நிலையில் இருந்த ஆண் நீர்நாய், மீன்பிடி வலை – 1, நைலான் கயிறு -1 ஆகியவை ஊர் முக்கியஸ்தர் குமார் முன்னிலையில் காண்பிக்கப்பட்டு அவரிடம் H நமுனா ஒப்புதல் பெறப்பட்டது. என்னிடம் காட்டப்படுவது H நமுனா ஆகும். **அந்த H நமுனா அ.த.சா.ஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. மேலும் சம்பவ இடத்தில் வைத்து வனவர் பிரகாஷ் ஸ்தலம் மகசர் தயார் செய்தார். **அந்த ஸ்தல மகசர் அ.த.சா.ஆ. 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. எதிரிகள்

குற்றத்தை ஒப்புக்கொண்டதால் எதிரிகள் மற்றும் கைப்பற்றப்பட்ட பொருட்களுடன் வனசரகத்திற்கு கொண்டு சென்றோம். இது தொடர்பாக கரிசல்பட்டி பிரிவு வனவர் பிரகாஷ் பார்வை மகசர் தயார் செய்தார். **அந்த பார்வை மகசர் அ.த.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. எதிரிகளை 1972 வன உயிர் பாதுகாப்புச்சட்டம் பிரிவு 50ன் படி கைது செய்யப்பட்டு வனஉயிரினமான நீர்நாய் என்பதால் வனஉயிர் பாதுகாப்புச்சட்டம் அட்டவணை 2 பாகம் 2 வரிசை எண் 4ன் படி நீர்நாய் அரியவகை உயிரினம் என்பதால் வழக்கு பதிவு செய்து திருப்பத்தூர் வனரசக அலுவலவன குற்ற எண். 18/2023 பதிவு செய்து எதிரிகளை காரணம் கூறி கைது செய்து கனம் நீதிமன்றத்திற்கு நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன்.

3. எதிரிகளிடமிருந்து கைப்பற்றிய வழக்கு சொத்துகளில் ஒன்றான நீர்நாயை எஸ்.புதுார் கால்நடை உதவி மருத்துவர் அவர்களுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு சரக அலுவலகத்திற்கு வரவழைக்கப்பட்டு நீர்நாயை பிரேத பரிசோதனை செய்தார். அதனை வீடியோ பதிவு செய்தேன். அப்போது நீர்நாய் தலையில் காயம் ஏற்பட்டு இரத்தகசிவு ஏற்பட்டு இறந்ததாக சொன்னார். பிடிப்பொருட்கள் படிவம் 95 ஆவணம் பூர்த்தி செய்து கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது. **அந்த படிவம் 95 அ.த.சா.ஆ, 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள நீர்நாய் வழக்கில் சம்பந்தப்பட்டதாகும். **அந்த நீர்நாய் அ.சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட வலை மற்றும் நைலான் கயிறு எதிரிகளிடமிருந்து கைப்பற்றப்பட்டது தான். **அந்த வலை மற்றும் நைலான் கயிறு அ.சா.பொ.2, 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** நீதிமன்ற அனுமதியின் பெயரில் இறந்த நீர்நாயை வனசரக அலுவலகத்தின் இடத்திலேயே புதைக்கப்பட்டது. அதை வீடியோ பதிவு செய்தோம். மேற்படி இரண்டு வீடியோக்களையும், சிடியில் பதிவேற்றம் செய்யப்பட்ட புகைப்படங்களையும் நீதிமன்றத்தில் ஒப்படைத்தேன். **அந்த இரண்டு சிடிகள் அ.சா.பொ.4, 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பிரேத பரிசோதனை அறிக்கையில் ஆண்நீர்நாயானது தாக்கப்பட்டு இறந்தது என்பது தெரியவந்ததால் எதிரிகள் மீது எனக்கு பின் பொறுப்புக்கு வந்த வனசரக அலுவலர் திரு.சதாசிவம் அவர்களால் அ-படிவம் தயார் செய்து நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u>

குற்றச்சாட்டு வனையப்பட்ட பிறகு கு.வி. செய்வதாக எதிரிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, SINGAMPUNARI**

**C.C. No. 125/2023 PW . 2**

**பெயர் : சரவணன்** **தந்தை/கணவர் பெயர்:**

**ஊர்** : **தாலுகா:**

**வயது** : **தொழில்: வனக்காப்பாளர்**

**ஜாதி** : **சமயம்:**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 20.02.2025

---

**(எதிரிகள் ஆஜர்).**

**<u>20.02.2025 முதல் விசாரணை:</u>**

1. நான் தற்போது சிவகங்கை வனக்கோட்டம், சிவகங்கை வனசரகம், காரைக்குடி பிரிவில் நாரணமங்களம் பீட் வனக்காப்பாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 27.05.2021ம் தேதி கரிசல்பட்டி பீட் வனக்காப்பாளராக பணிபுரிந்த போது அன்றைய தினம் மாலை சுமார் 5 மணியளவில் கரிசல்பட்டி பிரிவு வனவர் பிரகாஷ் என்னை செல்போனில் தொடர்புகொண்டு பழைய நெடுவயல் கிராமத்தில் உள்ள கண்மாயில் நீர்நாயினை வேட்டையாடி நைலான் கயிறால் சிலர் பிடித்து கட்டி வைத்திருப்பதாக தகவல் சொன்னார். அதனை மீட்பதற்காக நான் விரைந்து சம்பவ இடத்திற்கு சென்ற போது நான், வனவர் பிரகாஷ், வனக்காப்பாளர் கண்ணபிரான் மிகைப்பணி வனக்காப்பாளர் கோபுர பாண்டியன் ஆகியோர் சம்பவ இடத்திற்கு சென்றோம். அங்கு நீர்நாய் ஒன்று நைலான் கயிறால் கட்டி வைக்கப்பட்டிருந்தது. அங்கு இருந்தவர்களிடம் விசாரித்த போது எதிரிகள் தாமாக முன்வந்து தாங்கள் தான் கட்டிவைத்ததாக கூறினார்கள். சிறிது நேரத்தில் மயங்கிய நிலையில் இருந்த நீர்நாய் இறந்துவிட்டது. அதன் பிறகு எதிரிகள் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை நான் பதிவு செய்தேன். வனவர் சம்பவ இடத்தில் வைத்து H நமுனா தயார் செய்தார். மேலும் சம்பவ இடத்தில் பார்வைமகசர், ஸ்தல மகசர் போன்ற ஆவணங்கள் தயார் செய்யப்பட்டது. எதிரிகள் மற்றும் பிடிப்பொருட்களை வனசரக அலுவலகத்திற்கு கொண்டு சென்றோம்.

2. எதிரிகளை 1972 வன உயிர் பாதுகாப்புச்சட்டம் பிரிவு 50ன் படி கைது செய்யப்பட்டு வனஉயிரினமான நீர்நாய் என்பதால் வனஉயிர் பாதுகாப்புச்சட்டம் அட்டவணை 2 பாகம் 2 வரிசை எண் 4ன் படி நீர்நாய் அரியவகை உயிரினம் என்பதால் திருப்பத்தூர் வனரசக அலுவலவன குற்ற எண். 18/2023 பதிவு செய்து எதிரிகளை காரணம் கூறி கைது செய்து கனம் நீதிமன்றத்திற்கு நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தோம். எதிரிகளிடமிருந்து கைப்பற்றிய வழக்கு சொத்துகளில் ஒன்றான நீர்நாயை எஸ்.புதுார் கால்நடை உதவி மருத்துவர் அவர்களுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு சரக அலுவலகத்திற்கு வரவழைக்கப்பட்டு நீர்நாயை பிரேத பரிசோதனை செய்தார். அதனை வீடியோ பதிவு செய்தோம். அப்போது நீர்நாய் தலையில் காயம் ஏற்பட்டு இரத்தகசிவு ஏற்பட்டு இறந்ததாக மருத்துவர் சொன்னார். பிடிப்பொருட்கள் படிவம் 95 ஆவணம் பூர்த்தி செய்து கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது. நீதிமன்ற அனுமதியின் பெயரில் இறந்த நீர்நாயை வனசரக

அலுவலகத்தின் இடத்திலேயே புதைக்கப்பட்டது. அதை வீடியோ பதிவு செய்தோம். மேற்படி இரண்டு வீடியோக்களையும், சிடியில் பதிவேற்றம் செய்யப்பட்ட புகைப்படங்களையும் நீதிமன்றத்தில் ஒப்படைத்தோம்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

குற்றச்சாட்டு வனையப்பட்ட பிறகு கு.வி. செய்வதாக எதிரிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.